அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

# அரையாண்டுத்தேர்வு 2024/2025

## தமிழ் - ஆண்டு 8

**புலன்மொழி வளத்தேர்வு** **வாசித்தல்**

முதன் முதலில் மாந்தர் பேசினார்களா? பாடினார்களா? மாந்தர் முதலில் பேசினர் என்றுதான் பலரும் எண்ணுகின்றார்கள். அதன் பிறகே பாடக் கற்றுக்கொண்டார்கள் என்றும் எண்ணுகின்றனர். ஆனால், உண்மை அது அல்ல. நாம் பேசக் கற்றுக்கொண்டு, நெடுங்காலத்திற்குப் பின்னர்தான் பாடக் கற்றுக்கொள்ளத் தொடங்கினோம். பாடுவது என்றால், இராகமும் தாளமும் அமைத்து, இசை இலக்கணப்படி பாடுவது மட்டும் அல்ல. மனம் போனபடி ஒலியை நீட்டியும் இனிமையாகவும் பாடுவதும் பாடல்தான். பாடலின் பொருளுணர்ந்து உணர்வுகளை வெளிப்படுத்திப் பாடினால் போதும். எடுத்துக்காட்டாக நாட்டுப்புற மக்கள் காட்டிலும் மேட்டிலும் வேலை செய்யும்போதும் நிலைமைக்கு ஏற்றவாறு குரலில் ஏற்ற இறக்கத்தோடு இசையமைத்துப் பாடுவதை நாம் காண்கின்றோம். இப்பாடல்கள் சிந்து, கும்மி, தெம்மாங்கு எனப் பல்வேறுவகையாக அழைக்கப்படுகின்றன.